

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அண்மையில் மறைந்த முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்களின் சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் (24.6.2023) நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

### தொழில் நுட்பம் வளர்ந்த அளவிற்கு

# பெண்கள் மீதான பார்வை வளர்ந்திருக்கிறதா?

## இணைய பாதுகாப்பு மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

கோவை, ஜூன் 25-

தேசிய இணைய பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்தின் சார்பில், பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு மாநாடு 23.06.2023 வெள்ளிக்கிழமை கோயம்புத்தூர் அவிநாசி சாலையில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் அரங்கத்தில் நடைபெற்றது. இதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

“டெக்னாலஜி வளர்ந்து கொண்டே போகிறது. ஆர்டிபிஷியல் இன்டெலிஜன்ஸ் என்கிற அளவு வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் கூட காலம் காலமாக குழந்தைகளுக்கு பெண்களுக்கு என்னென்ன அழுத்தங்கள் இருந்ததோ அதை இப்போது சைபர் ஸ்பேஸுக்குள்ளும் கொண்டு வந்திருக்கிறோம். இதுதான் இன்று நடந்துகொண்டிருக்கிறது.

பெண்களுக்கு குழந்தைகளுக்கு எதிரான கிண்டல்கள், கேலிகள், சைபர் ஸ்பேசுக்குள் இன்னும் மிக பெரிய பூதாகரமான அளவில் இருக்கின்றன.

நாளை ’ஏ ஐ’ இன்னும் மிக பரவலாக புழக்கத்துக்கு வந்துவிடும். நாளைக்கு நீங்கள் சாட் பண்ணிக் கொண்டிருக்கும்போது நீங்கள் ஒரு மனிதரோடு பேசிக் கொண்டிருக்கிறீர்களோ அல்லது ஏஐ யால் உருவாக்கப்பட்ட ஒரு போலி ஐடியோடு பேசிக் கொண்டிருக்கிறீர்களா என்றே தெரியாது.

இதில் உள்ள அபாயங்களையும் புரிந்துகொள்ள கூடிய கட்டாயத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். கல்வியில் அறிவியல், கணக்கு என சொல்லித் தருகிறோம். சிலிகான் வேலியில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் நிரம்பி வழிகிறார்கள்.

**பெண்ணை ஆணுக்கு நிகராக மதிக்க வேண்டும்!**

ஆனால் ஆணும் பெண்ணும் சமம், ஜாதி இல்லை என்ற விஷயத்தை சொல்லித் தருவதே கிடையாது. ஒரு பெண்ணை ஆணுக்கு நிகராக மதிக்க வேண்டும் என்று வீட்டில் நாம் சொல்லித் தருவதில்லை. ஆனால் அந்த பெண்ணுக்கு மட்டும், ‘உனக்கு என நடந்தாலும் அதுக்கு நீதான் பொறுப்பு’ என்று வீட்டில் கல்லூரிகளில் சொல்லித் தருகிறார்கள்

நான் கல்லூரிகளுக்கு செல்லும்போது கேட்பேன். எதற்கு பெண்களுக்கு என்று டிரஸ் கோடு வைத்திருக்கிறீர்கள் என்று. அதற்கு என்னிடம் நிறைய பிரின்சிபால் கூட சண்டைக்கு வருவார்கள்.

பெண்ணுக்கு என்ன நடந்தாலும் எதற்கு அவளையே பொறுப்பாளி ஆக்குகிறீர்கள்? தான் எப்படி இருக்க வேண்டும். என்ன உடுத்திக் கொள்ள வேண்டும், யாராக இருக்க வேண்டும் என்ற உரிமை அவளுக்கு இருக்கிறது.

அதைப் பார்க்கக் கூடியவர்கள் சரியாக பார்க்க வேண்டும். அவள் என்ன உடுத்தியிருந்தாலும் அந்த பெண்ணை நீ மரியாதையோடு நடத்த வேண்டும். ஒரு பெண்ணின் அனுமதி இல்லாமல் அவளை நீ தொடக் கூடாது என்பதை நாம் யாருமே சொல்லித் தருவதில்லை. இந்த விஷயங்களை நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தினால் தான் எல்லாம் மாறும். அடிப்படைகள் மாற வேண்டும். அப்போதுதான் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கித் தர முடியும்.

ஆனால் அது நாளைக்கோ நாளை மறுநாளோ நடந்துவிடும் என்ற சாத்தியம் இல்லை. அதனால் நம்மை நாம் எப்படி பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர வேண்டும்.

டெக்னாலஜி இப்போது அடிப்படை உரிமையாக மாறிவிட்ட கால கட்டத்திலே நாம் இருக்கிறோம்.

இன்று சைபர் இல்லிட்டரசி அதாவது இணைய பயன்பாடு பற்றி அறியாமல் இருப்பது என்பது சமூகத்தில் செயல்பட முடியாத இடத்தில் ஒருவரை கொண்டு போய் நிறுத்தி விடும். அப்படிப்பட்ட காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். டெக்னாலஜியும் அதுபற்றிய புரிதலும் நமக்கு அவசியம். ஆனால் அதற்குள் நாம் பாதுகாப்பாக எப்படி வாழ்வது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு இப்படிப்பட்ட கூட்டங்கள் முக்கிய பங்காற்ற முடியும்.

**இணையத்தை பெண்களுக்கு பாதுகாப்பான இடமாக மாற்றலாம்!**

ஏனென்றால் இப்போது இண்டர்நெட்டில் ஒரு விஷயத்தைப் வெளியிட்டுவிட்டால் அதை எடுக்கவே முடியாது என்ற ஒரு பயம் பலருக்கும் இருக்கிறது. அது பொய். இது பலரையும் பயமுறுத்தும் விஷயமாக ஆகியிருக்கிறது. ஒரு விஷயம் இணையத்தில் வந்துவிட்டால் ஏழேழு ஜென்மத்துக்கும் அது துரத்தும் என்ற மனநிலைதான் பெண்களுக்கு இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட விஷயங்களை இணையத்தில் இருந்து முற்றிலுமாக அகற்ற முடியும் என்ற நம்பிக்கையை இதுபோன்ற கான்க்ளேவ் நிகழ்ச்சிகள் மூலமாக நாம் ஏற்படுத்த முடியும்.

ஆனால் இதையெல்லாம் தாண்டி இணையத்தை பெண்களுக்கு பாதுகாப்பான இடமாக எப்படி மாற்றிக் கொள்ள முடியும்? ஒரு கருத்தை ஒரு சமூக தளத்தில் ஒரு பெண் வெளியிடும் போது அதற்கு வரக் கூடிய எதிர்வினைகள் அவர்களது பர்சனல் விவகாரங்களை வைத்து கீழ்த் தரமாக மிகத் தரக் குறைவாக அப்பெண்களை கொச்சைப்படுத்தி பேசக் கூடிய சூழல் இருக்கிறது.

அது நிறுத்தப்படும் வரை நாம் வாயை மூடிக் கொண்டிருக்க முடியுமா? அதை எவ்வாறு கையாள வேண்டும்? அதை புறக்கணிப்பதா, எதிர்த்து நிற்பதா என்பது பற்றிய விழிப்புணர்வு நமக்குத் தேவை. இன்னும் ஒரு விஷயம்.. யாரும் நமது வாழ்க்கையைத் தீர்மானிக்க முடியாது. ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாம் நல்ல விஷயம் என்று செய்வது சில நேரம் தவறாக முடியலாம். நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடம் நாம் பழகும்போது அவர் நம் நம்பிக்கைக்கு உரியவராக இல்லாமல் மாறிவிடலாம். இப்படிப்பட்ட விஷயங்கள் நடக்கும்போது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை நினைத்து எதிர்காலத்தை நினைத்து வெட்கப் படவேண்டிய அவசியமே கிடையாது.

உங்கள் உடல் என்பது நீங்கள் வெட்கப்பட வேண்டிய விஷயம் இல்லை. உலகத்தில் மிக இயற்கான விஷயம்தான் இது. அதனால் உடலை வைத்து நம்மை பயமுறுத்துகிறார்கள், மிரட்டுகிறார்கள் என்று கருதி தவறான முடிவுகளுக்கு தயவு செய்து நாம் போய்விடக் கூடாது. மீண்டும் ஒரு பதுங்குக் குழி வாழ்வுக்குத் திரும்பிடக் கூடாது.

இங்கே பேசிய கோவை மாநகர் காவல் ஆணையாளர் பாலகிருஷ்ணன் பேசும் போது, கோயமுத்தூரில் சைபர் குற்றங்களை கையாள்வதற்கு ’அக்கா’ என்ற திட்டத்தை செயல்படுத்தி வருவதாக கூறினார். தங்கள் அடையாளங்களை தெரிவிக்க முன் வராதவர்களுக்கும் கூட பயனுள்ளதாக இந்த திட்டத்தை அவர் மேற்கொண்டு வருவது பாராட்டத் தக்கது.

ஆனால் காவல்துறையிலே கூட... ஒரு பெண் புகார் தெரிவிக்க வரும் போதே, ‘நீ ஏன் இப்படி பண்ணே?’ என்று கேட்கிறார்கள். பெண் போலீஸார் கூட இப்படிக் கேட்கிறார்கள். நாடு முழுதும் பத்தாயிரம் புகார்கள் சைபர் க்ரைமில் இருக்கின்றன. இவ்வளவுதானா குற்றங்கள் என்று கேட்காதீர்கள். இவ்வளவுதான் புகார்கள் ஆகியிருக்கின்றன. அதிலும் சுமார் ஆறாயிரம் புகார்கள் சைபர் க்ரைம் ஆக பார்க்கப் படாமல் மற்ற குற்றங்களாக எஃப்.ஐ.ஆர். போட்டிருக்கிறார்கள்.

**எல்லா தரப்பினருக்கும் பாலின சமத்துவ புரிதல் வேண்டும்!**

நாடு முழுதும் உள்ள காவல் நிலையங்களில் போலீஸாருக்கு சைபர் க்ரைம் பற்றிய புரிதல் இருக்க வேண்டும். அதைத் தாண்டி பாலின சமத்துவம் காவல்துறையினரிடம் மிக முக்கியமாக இருக்க வேண்டியது. பெற்றோர்களும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம் குழந்தைகளை நாம் ஜட்ஜ் பண்ண கூடாது. கல்லூரியாக இருக்கட்டும், வேறு எந்த இடமாக இருக்கட்டும். நாம் பாதிக்கப்பட்டவர் பக்கம் இருக்க வேண்டும்.

இன்று இந்த கான்க்ளேவில் உங்களுக்கு இருக்கக்கூடிய கருத்துகளை பகிர்ந்து கொள்ளுங்கள். சந்தேகங்கள் இருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வதற்கு என்பதற்கு இந்த கூட்டம் மிக்க உதவிகரமாக அமையும்.

இந்த உலகத்தை பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மற்றும் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான உலகமாக ஆக்குவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாட்டி, மகளிர் ஆணைத் தலைவர் குமரி விஜயகுமார், காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், NCSRC இயக்குனர் காளிராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### சீற்றமுடன் வினாவினை நாணேற்றி,

# சிந்திக்க, சிரிக்க வைத்த தலைவர் கலைஞர்!

**‘1987’** எம். ஜி. ஆர் ஆட்சிக்காலம்!

நான் சட்டக்கல்லூரி மாணவனாக விடுதியில் தங்கி படித்துவந்தேன்.

ஒருநாள் இந்தியக் கடற்படை வங்காள விரிகுடாவில் பயணித்த இலங்கைத் தமிழர்கள் பத்துப்பேரை சுற்றி வளைக்கவே உடனே அவர்கள் தங்களது கழுத்தில் கட்டியிருந்த சயனைடு குப்பியைக் கடித்து விஷத்தையருந்தி, வீரமரணத்தைத் தழுவினர்.

இந்தத் துயர நிகழ்வு அன்றைய நாளில் பெரும் அதிர்வை உண்டாக்கியது. திமுக உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகளும், சமூக அமைப்புகளும் தங்களது பலத்த கண்டனத்தை, எதிர்ப்பினை எழுப்பிய வண்ணம் நாட்கள் நகர்ந்தது.

பல்வேறு தரப்பின் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாத முதல்வர் எம். ஜி. ஆர், *தலைவர்கலைஞர்* அவர்களின் கண்டனத்திற்கு பதில் சொல்கிறேன் பேர்வழி என்று போகிற போக்கில், “ இதிலே கருணாநிதிக்கு என்ன இவ்வளவு அக்கறை? “ என்றொரு அறிக்கையிலே கேட்டு விட்டார்.

விடுவாரா? நம் தலைவர்.

அன்றைய நாளில் சென்னை புரசைவாக்கம் தாணாத் தெருவில் ஒரு கண்டனக் கூட்டம். புரசைவாக்கம் மில்லர்ஸ் ரோடு சட்டக்கல்லூரி மாணவர் விடுதியில் தங்கியிருந்த அன்றைய கழக மாணவர் அண்ணன் திருமாவளவன் அவர்களோடு நானும் சென்றிருந்தேன். இலங்கை தமிழர் போராட்டத்துயரில் பொய் செய்திகளை பரப்பி வரும் சென்னை தொலைக்காட்சிக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடைபெற்றது. (அடையாளத்திற்கு தலைவர் அவர்கள் ஒரு தொலைக் காட்சி பெட்டியை சுத்தியல் கொண்டு உடைத்தார்)

தனது நீண்ட நெடிய கண்டன உரையின் இடையே தங்களது இன்னுயிரை இந்திய கப்பற்படை சுற்றி வளைத்ததால் மாய்த்துக் கொண்ட ஈழத்தமிழருக்காய் தனது அனுதாபத்தை, வேதனையை வெளிப்படுத்திய தலைவர் கலைஞர், “இதிலே எனக்கென்ன பெரிய அக்கறை என்று எம். ஜி. ஆர். கேட்கிறார். காரணங்கள் பல உண்டு. உதாரணத்திற்கு சொன்னால், சயனைடு விஷமருந்திய பத்து தம்பிகளில், ஒருவர் பெயர் ‘அண்ணாதுரை’, இன்னொருவர் பெயர் ‘கருணாநிதி’ மற்றொருவர் பெயர் ‘அன்பழகன்’ இதைவிட வேறென்ன அக்கறை இருக்க வேண்டும் என எம். ஜி. ஆர் எதிர்பார்க்கிறார்? என்று சிற்றமுடன் கணை தொடுத்தார்.

அப்பொழுது எழுந்த கரவொலி, சிரிப்பின் எதிரொலி விண்ணைப்பிளந்து, புரசைவாக்கம் தாண்டி ராமாவரம் தோட்டம் வரை தொடரொலியாய் அதிர்ந்திருக்கும்.

வழக்கறிஞர்
**வெ. அன்புவாணன்**
கழக கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்



### சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து அனைவரையும்

# ‘இடஒதுக்கீடு எங்கள் உரிமை’ என ஓங்கி முழங்கச் செய்தவர் வி.பி.சிங்!

## பிறந்த நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 26-

சமூகநீதிக்காவலர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர், முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்த நாளையொட்டி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து அனைவரையும் ‘இட ஒதுக்கீட்டு உரிமை’ என ஓங்கி முழங்கச் செய்தவர் வி.பி.சிங் அவர்கள்” எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.



இதுகுறித்து, முன்னாள் பிரதமர் வி.பி சிங் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களது பிறந்தநாளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருந்த அப்புரட்சியாளருக்கு என் புகழஞ்சலியைச் செலுத்துகிறேன். சமூகநீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து, அனைவரையும் “இட ஒதுக்கீடு எங்கள் உரிமை” என ஓங்கி முழங்கச் செய்தவர் அவர்.**

**வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு அதிகாரமளிக்கும் இலக்கில் வி.பி. சிங் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள் ஆவர். வி.பி. சிங் அவர்களது சிந்தனைகள் மேலும் ஒளிமயமான, சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மைத் தொடர்ந்து வழிநடத்தட்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கடும் வெப்பம்: பாட்னாவில் பள்ளிகள் மூடல்!

பாட்னா, ஜூன் 26-

அதிக வெப்பம் காரணமாகபாட்னாமாவட்டத்தில் ஜூன் 28 ஆம் தேதி வரை 12 ஆம் வகுப்பு வரையிலான அரசு மற்றும் தனியார் பள்ளிகளை மூடுமாறு பாட்னா மாவட்ட நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக மாவட்டமாஜிஸ்திரேட்டாக்டர். சந்திர சேகர் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “பாட்னா நீதிமன்றத்தின் ஆர்டர் வீடியோவின் தொடர்ச்சியாக 16.06.2023 தேதியிட்ட மெமோ எண். 8534/L, மாவட்டத்தில் அதிக ஈரப்பதத்துடன்கூடிய அதிகவெப்பநிலை காரணமாக, குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் உயிருக்கு ஆபத்து இருப்பதாக எனக்குத் தோன்றியது. எனவே, நான், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ன் பிரிவு 144ன் கீழ், பாட்னாமாவட்டத்தில் உள்ள 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளின்(முன்பள்ளி மற்றும் அங்கன்வாடிமையங்கள்உட்பட) கல்வி நடவடிக்கைகளை 28.06.2023 வரை தடை செய்கிறேன். மேலேகுறிப்பிட்டுள்ள உத்தரவு 26.06.2023 மற்றும் 28.06.2023வரைஅமலில்இருக்கும். 24.06.2023 அன்று எனது கையொப்பம்மற்றும்நீதிமன்ற முத்திரையுடன்இந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது” என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கமலாபுரம் ஊராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (மாவட்ட ஊராட்சி) 2021-22ன் கீழ் கட்டப்பட்ட புதிய பயணியர் நிழற்குடையை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி பெ.கீதாஜீவன், மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, புதூர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அ. இராசமாணிக்கம்
## ஜூன் 26 (2016)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**